**தலைப்பு 195 - திறமுறை அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திறமுறை அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) திறமுறை அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) அமைச்சினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிச் செயலாற்றல் கூற்றில் பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) வருமானமல்லாத பெறுவனவுகளின் கீழ் ரூபா 8,698,521 தொகை குறிப்பிடப்பட்டிருந்தது. கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த கணக்கு பொழிப்புக்களுக்கமைய ஏனைய பெறுவனவுகள் ரூபா 7,740,738 ஆக இருந்தது. அதற்கமைய ரூபா 957,783 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது திறைசேரியின் இறுதி நிதிக்கூற்றுக்கள் அடிப்படையாக கொள்ளப்பட வேண்டும். | அமைச்சிற்கு இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களின் கடனை கையளிப்பதற்கு உரிய பணமான ரூபா 959,949.50 ஏனைய பெறுவனவுகளின் கீழ் கணிப்பிடப்பட்டுள்ளதுடன், பேரேட்டுப் பதிவுகளுடாக ரூபா 2,166.77 ஆன பணம் சீராக்கப்பட்டதன் பின்னர் ஏனைய பெறுவனவுகளான ரூபா 8,698,521 ஆன தொகை சரியானதாகும். |
| (ஆ) நிதிச் செயலாற்றல் கூற்றின் முற்பணம் பெறுவனவுகளாக ரூபா 4,154,406 தொகை குறிப்பிடப்பட்டிருந்த | - மேற்படி - | அமைச்சின் நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமல்லாத பெறுவனவுகளின் கீழ் 195011 முற்பணக் கணக்கின் |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், திறைசேரி கணனி அச்சிட்டு பதிவுகளுக்கமைய அது ரூபா 5,577,886 ஆக இருந்தது. அதற்கமைய, ரூபா 1,423,480 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | | பெறுவனவுகள் ரூபா 4,154,406 ஆன பணம் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. ஏனைய திணைக்களங்கள், அமைச்சுக்களின் கீழ் செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 1,423,480 ஆன தொகை சீராக்கல் கணக்கின் பதிவுகளின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், அந்த தொகை ரூபா 1,123,480 அல்ல ரூபா 1,423,480 ஆகும். |
| (இ) | நிதிச் செயலாற்றல் கூற்றின் முற்பண கொடுப்பனவுகளை ரூபா 13,740,933 தொகை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட மாதாந்த கணக்குப் பொழிப்புகளுக்கமைய அது ரூபா 14,706,838 ஆக இருந்தது. அதற்கமைய ரூபா 965,905 ஆன வேறுபாடொன்று வெளிப்படுத்தப்பட்டது. | - மேற்படி - | அந்த பணம் கட்டுநிதி சீராக்கல் கணக்கின் பதிவொன்றினூடாக குறிப்பிடப்பட்டுள்ளது. |

### 1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

------------------------------

காசுப்பாய்ச்சல் கூற்றில் பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலில் வருமானமல்லாத பெறுவனவுகளாக ரூபா 1,607,150,989 குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களுக்கமைய அதன் பெறுமதியானது | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டியமை. | காலாண்டு ரீதியான எல்லைகளின் அடிப்படையில் சில செலவின விடயங்களுக்கு செலவினங்களை கணக்கு வைக்க முடியாமையால் ஏனைய செலவின விடயங்களுக்கு வரவு வைக்கப்பட்டதன் பின்னர் அவற்றை திருத்துவதற்கு அந்த பேரேட்டுப் பதிவுகள் இடப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | ரூபா 1,609,728,543 ஆக ரூபா 2,577,554 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட காசுபாய்ச்சலின் கீழ் வைப்பு செலுத்துதல்கள் ரூபா 303,385 பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - |
| (இ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகளுக்கு செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சலின் கீழ் ரூபா 1,606,562,438 தொகை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்தக் கணக்கு பொழிப்புக்களுக்கமைய அது ரூபா 1,599,443,544 ஆக இருந்தது. அதற்கமைய ரூபா 7,118,894 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (ஈ) | முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலில் முற்பண பெறுவனவுகளாக ரூபா 5,114,355 மற்றும் முற்பணச் செலுத்துதல்களாக ரூபா 14,706,838 காண்பிக்கப்படவில்லை. | - மேற்படி - |
| (உ) | அமைச்சு நிதி நடவடிக்கைகளில் ஈடுபட்டிராத போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சலில் ரூபா | - மேற்படி - |

199,420
காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.6.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானவாறு குறிப்பான கால எல்லையினுள் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய குறிப்பான கால எல்லையினுள் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளது.

| அவதானிப்புகள் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மைகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (i) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை** | | | | |
| | XV ஆம் அத்தியாயத்தின் 11.1 ஆம் பிரிவு மற்றும் 1990 யூலை 27 ஆந் திகதிய எவ்/பீ/06/140 ஆம் இலக்க திறைசேரி பிரதி செயலாளரின் கடிதம் | 520,000 | திறைசேரியின் பிரதி செயலாளரின் கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்குரிய 04 உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு பிரயாணங்களை மேற்கொள்வதற்காக வணிக வகுப்பு விமான | வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்வதற்கு விமான பயணச்சீட்டுக்களை கொள்வனவு செய்யும் போது திறைசேரியில் பிரதிச் செயலாளரின் | அந்த கலந்துரையாடலுக்காக பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் அப்போது தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த சர்வதேச வர்த்தகம் தொடர்பான முகவர் நிலையத்திற்குரியது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 520,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. | கடிதத்தில் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மாத்திரம் வணிக வகுப்பின் விமான பயணச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்காக செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | என்பதும், அவர்களுக்கு எவ்வித கொடுப்பனவும் மேற்கொள்ளப்படாமையால் அவர்களின் அனுபவம் மற்றும் திறன்களை கருத்திற்கொண்டு வெளிநாடு செல்லும் போது வணிக வகுப்பின் விமான பயணச்சீட்டுக்களை வழங்குதல் மாத்திரம் இடம்பெற்றுள்ளது. |
| **(ii)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | | | |
| | நிதிப்பிரமாணம் 104(1), 104(3) மற்றும் 104(4) | கணிப்பிடப்பட்டிருக்கவில்லை | வாகன விபத்துக்கள் 05 தொடர்பில் 07 நாட்களினுள் சமர்ப்பிக்க வேண்டிய ஆரம்ப விசாரணை அறிக்கை மற்றும் 03 மாதங்களினுள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதி வரையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட்டு உரிய திகதிகளில் உரிய அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய அறிக்கைகளை விரைவாக நிறைவு செய்யுமாறும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் செயற்படுமாறும் உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| **(iii)** | **அரச நிர்வாகச் சுற்றறிக்கை** | | | | |
| | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | | அமைச்சின் 16 வாகனங்களுக்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். | தற்போது 05 வாககனங்களின் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. |

**(iv) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை**

| | | | | |
|---|---|---|---|---|
| 2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்க சுற்றறிக்கை | 266,800 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக இராஜாங்க அமைச்சிற்காக வெசக் வாழ்த்து அட்டைகள் 3,000 அச்சிடுவதற்கு ரூபா 266,800 செலவிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும | விடயப் பொறுப்பு அமைச்சர்களின் கோரிக்கையின் அடிப்படையில் வாழ்த்து அட்டைகள் அச்சிடப்பட்டதாகவும், செலவினங்களை கட்டுப்படுத்துவதற்கு குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**(v) சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை**

| | | | | |
|---|---|---|---|---|
| 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02.i ஆம் பந்தி | 1,069,330 | அமைச்சினால் வேறு தரப்பினருக்குரிய 04 வாகனங்கள் உரிய அங்கீகாரமின்றி பயன்படுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும | குறித்த வாகனங்களை சுவீகரிக்கும் பணிகள் தொடர்பில் தேடிப்பார்த்து நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 17 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் 22 மூலதன செலவின விடயங்களுக்கும் மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், அந்த நிதியேற்பாடுகளை பயன்படுத்தி பின்னரான சேமிப்பானது ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த நிதியேற்பாட்டின் 11 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அவ்வாறான நிதியேற்பாடுகள் எஞ்சியுள்ளதுடன், நாட்டில் நிலவிய அரசின் மாற்றம், மதியுரை நிறுவனங்களை தெரிவு செய்வதிலான தாமதம், தகைமைவாய்ந்த நிபுணர்களை பெற்றுக்கொள்ளல் தாமதமடைதல் போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் எதிர்பார்க்கப்பட்டவாறு |

| | | |
|---|---|---|
| | | செயற்திட்டங்களை அமுல்படுத்தாமையால் நிதியேற்பாடுகள் எஞ்சியுள்ளன. |

2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தல்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 05 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் பயன்படுத்திய பின்னரான சேமிப்பினை விஞ்சி ரூபா 321,695 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அத்தியவசியமான மற்றும் பிற்போட முடியாத செலவினங்களுக்காக அவ்வாறான பொறுப்புக்களுக்கு கடப்பட நேர்கின்றமை. |
| (ஆ) நிதிக்கூற்றுக்களில் பொறுப்புகள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்படாத 2018 ஆம் ஆண்டிற்குரிய பொறுப்புகளின் பெறுமதி ரூபா 2,053,532 ஆக இருந்தது. | ஆண்டிற்குரிய அனைத்து பொறுப்புகளும் நிதிக்கூற்றில் பொறுப்புகள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட வேண்டும். | அந்தக் கொடுப்பனவுகள் தாமத வழுவொன்றினால் உள்ளடக்க முடியாதுள்ளதாகவும், எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதவாறு செயற்படுவதாகவும் குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டது. |

2.3 செயல்நிமித்த உப கட்டுநிதிகளை விடுவித்தல் மற்றும் தீர்த்தல்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் வழங்கப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி பணி நிறைவடைந்து 10 நாட்களினுள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 07 உத்தியோகத்தர்களுக்கு 10 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 287,000 தொகையான செயல்நிமித்த உபகட்டுநிதிகள் 25 முதல் 67 நாட்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 372(5) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | உப கட்டுநிதிகளை தீர்த்தல் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தாமதமடைந்துள்ளதாகவும், அது தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

### 3.1 செயலாற்றல்

--------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வியாபார வசதிகளின் கீழ் 07 உடன்படிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 70 மில்லியனான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 33.92 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அவற்றுள் 05 உடன்படிக்கைகளுக்குரிய அடையப்பட்ட செயன்முன்னேற்றம் 5 சதவீதம் முதல் 10 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. மேலும், 03 உடன்படிக்கைகள் 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்காக பிற்போடப்பட்டிருந்தது. | ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | நோக்கங்கள், பொது வரையறைகள், பிணக்குத் தீர்ப்பனவுகள், தீர்வை வரிக் கோடுகள் போன்ற தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பான இணக்கப்பாட்டொன்றிற்கு வருதல் தாமதமடைதல் மற்றும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் சில உடன்படிக்கைகள் 2020 ஆம் ஆண்டு வரையிலும் பிற்போடப்பட்டிருந்தது. |
| (ஆ) | மில்லனிய கைத்தொழில் வலயத்தில் ரோஜனா செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் இணைப்புச் செய்தல் (Implementing Coordinating the project on Rojana Industrial Park in Millaniya) எனும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 2,900 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் ரூபா 949 மில்லியன் அதற்காக செலவிடப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்டவாறு பணிகளின் செயன்முன்னேற்றத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | பொது திறைசேரியின் கோரப்பட்ட கட்டுநிதிகள் போதுமான அளவில் கிடைக்காமையின் அடிப்படையில் சேவை வழங்கிய நிறுவனங்களுக்கு பணம் விடுவிக்கும் போது சிக்கலான நிலமையொன்றுக்கு முகங்கொடுக்க நேர்கின்றமை. |

| | | | |
|---|---|---|---|
| | 2018 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த காணிகளை சுவீகரித்தல், சுற்றாடல் தாக்கங்களை மதிப்பாய்தல், குடும்பங்களை மீளக் குடியமர்த்தல், நீர், மின்சாரம் மற்றும் நுழைவு வீதிகளினை வழங்குதல் போன்ற பணிகளில் 20 சதவீதமான பௌதீக செயன்முன்னேற்றமொன்று கைப்பற்றப்பட்டிருந்தது. | | |
| (இ) | பிங்கிரிய மற்றும் வெலிகம கைத்தொழில் வலயத்தினை நிறுவும் (Establish Industrial Zone in Bingiriya and Weligama) செயற்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 500 மில்லியனான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 154.53 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், பௌதீக செயன்முன்னேற்றம் 40 சதவீதமாக இருந்தது. | திட்டமிடப்பட்டவாறு பணிகளின் செயன்முன்னேற்றத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | பொது திறைசேரியின் கோரப்பட்ட கட்டுநிதிகள் போதுமான அளவில் கிடைக்காமையின் அடிப்படையில் சேவை வழங்கிய நிறுவனங்களுக்கு பணம் விடுவிக்கும் போது சிக்கலான நிலமையொன்றுக்கு முகங்கொடுக்க நேர்கின்றமை. |
| (ஈ) | படகு மற்றும் கப்பல்களை நிர்மாணிப்பதற்காக உரிய வலயத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் இணைப்புச் செய்தல் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 100 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள் ரூபா 8,107 மில்லியன் மாத்திரம் | திட்டமிடப்பட்டவாறு பணிகளின் செயன்முன்னேற்றத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2018 ஆம் ஆண்டின் இறுதி காலத்தில் அரசில் ஏற்பட்ட மாற்றங்களின் அடிப்படையில் நிகழ்ச்சித்திட்டங்கள் ஓரளவு தாமதமாகியுள்ளதாகவும், 2019 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டினுள் இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் செயன்முன்னேற்றம் உயரிய மட்டத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிடுள்ளது. |

செலவிடப்பட்டிருந்ததுடன், 45 சதவீதமான பௌதீக செயன்முன்னேற்றம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் மீளாய்வாண்டின் செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவிற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை பாராளுமன்றத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பிரதான பெறுகைகள் திட்டத்தில் பெறுகை பணிகள் விரிவாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, பிரதான பெறுகைகள் திட்டமானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | பிரதான பெறுகைத் திட்டத்தில் ஆண்டிற்கான பெறுகை நடவடிக்கைகள் விரிவானதாக காண்பிக்கப்பட வேண்டியமை. | 2019 ஆம் ஆண்டிற்காக பெறுகைத் திட்டம் விரிவானதாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) பிரதான பணியொன்றான வர்த்தக உடன்படிக்கைகளுக்குரிய கலந்துரையாடல்கள் மற்றும் செயலமர்வுகளுக்காக இடவசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் தொடர்பில் பெறுகை நடவடிக்கைகள் பிரதான பெறுகைகள் திட்டத்தின் | ஆண்டினுள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள அனைத்து பெறுகைகளும் பிரதான பெறுகைகள் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டியமை. | கலந்துரையாடல்கள் மற்றும் செயலமர்வுகளுக்காக இடவசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் தொடர்பில் பெறுகை நடவடிக்கைகள் பிரதான பெறுகைகள் திட்டத்தினுள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| மூலம் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) 2006 இன் அரசாங்க பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் பின்வருமாறு அகற்றுதல்கள் இடம்பெற்றிருந்தது. | | |
| (i) 5.3 வழிகாட்டிக்கமைய ரூபா 759,820 பெறுமதியான பெறுகை பணிகள் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட விலைக்கேள்வி கோரல் ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட விலைக்கேள்வி கோரல் ஆவணங்களை பயன்படுத்துவதற்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) வழிகாட்டி 5.6.1 (அ), (இ) மற்றும் (ஈ) பிரகாரம் கணனியொன்றுக்காக கூறுவிலைகளை கோரும் போது வியாபாரப் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அவ்வாறு குறிப்பிடப்பட்டதன் பின்னர் ‘‘அல்லது அதற்கு சமனான தொகுதி’’ எனும் சொத்துக்கள் இடப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் பெறுகை பணிகளுக்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டது. |
| (iii) பெறுகைகள் வழிகாட்டி 4.3.1(அ) பிரகாரம் ஒவ்வொரு பெறுகைக்கும் உரிய அனைத்து தொடர்புடைய செலவினங்களும் உள்ளடங்கலாக மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.3.1(அ) பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டது. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| அமைச்சிற்கு சொந்தமான வாகனமொன்று மற்றுமொரு அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | வாகனங்களை விடுவிக்கும் போது முறையான நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். | அந்த வாகனத்தை ஒப்படைப்பதற்கு உரிய பணிகள் இடம்பெற்றவாறு உள்ளது. |

**3.5 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் அமைச்சின் ஆலோசகர்கள் இருவருக்காக முறையே ரூபா 4.19 மில்லியன் மற்றும் ரூபா 1.09 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்பட்ட பணிகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | பதவிக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக சேவை நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்ட விபரமொன்று (Terms of Reference) தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் சரியான தன்மையினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நியமனத்திற்குரிய பின்புலம், நிபுணத்துவ அறிவு மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிப்பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புகள் அமைச்சரவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், சேவை நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்ட விபரமொன்று தற்போது தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் மூன்று பேரின் இருக்கைகள் இறுதித் தருவாயில் ஒதுக்கப்பட்டமையின் காரணத்தால் விமானப் பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 77,500 ஆன மேலதிகக் கட்டணத்தை செலுத்த நேர்ந்திருந்தது. | திட்டமிடப்பட்டவாறு வெளிநாட்டு பயணங்கள் திட்டமிடப்பட வேண்டியமை. | பயணச்சீட்டுக்களை ஒதுக்கும் போது அது தொடர்பில் கவனஞ் செலுத்துமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டது. |

## 4 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய 76 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | குறித்த வெற்றிடங்கள் தொடர்பில் அரச நிர்வாக அமைச்சிற்கு அறிவித்துள்ளதுடன், மீண்டும் நினைவுறுத்தல் கடிதங்கள் அனுப்பி உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | அமைச்சின் பதவியணியில் 296 பேர்களுக்கிடையே 32 பேருக்கு மாத்திரம் பயிற்சி சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருந்தன | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அமைச்சின் பதவியணியில் 161 பேருக்கு ஏற்றமதி அபிவிருத்தி சபையின் கடமைகளுக்காக மாவட்ட செயலகம் / பிரதேச செயலகம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பிரதேச அலுவலகங்களில் சேவையாற்றுவதற்காகவும், அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் பயிற்சி பாடநெறிகளிலும் பங்குபற்றச் செய்யப்பட்டுள்ளனர். |